# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 2



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி** (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

**(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு )**

**ISBN: 978-93-87865-06-8**

தொகுதி – 1

**( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளயிடப்பட்டது )**


பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்**, தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**



வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | திருவிவிலியச் சமத்துவம் | முனைவர் அஞ்சலி அன்னாபாய் இராஜசேகரன் | 1 |
| 2. | மனிதம் | திரு.அருள்ராஜ் திலக், அ. | 6 |
| 3. | நீதிமொழியில் அறம் | முனைவர் அலிஸ்ராணி, ப. | 8 |
| 4. | திருவிவிலியம் காட்டும் பெண்ணியச் சிந்தனை | திருமதி. அனிதா ஜுடிட், ஞா. | 11 |
| 5. | திருவிவிலியத்தில் பெண்கள் சார்ந்த மதிப்புகள் | முனைவர் அன்புராணி, செ. | 14 |
| 6. | "திருப்பாடல்கள்" முன்வைக்கும் இறை மன்றாட்டுகள் | செல்வி ஆனந்தவள்ளி, த. | 18 |
| 7. | சபைநூல் உணர்த்தும் உறவுநலம் | திருமதி. ஆனி மரிய ஜான்சி, டே. | 22 |
| 8. | விவிலியத்தில் மனித நேயச் சிந்தனைகள் | திரு. ஏசுதாஸ், வு. | 25 |
| 9. | மதிப்பீடு - மதிப்பு இழப்பு - மீள்மதிப்பீடு | முனைவர் ஏஞ்சல், இரா. | 27 |
| 10. | அன்பினால் இணைக்கப்பட்ட சகோதரத்துவம் | முனைவர் ஜவி ஜெனோ, சு. | 30 |
| 11. | திருவிவிலியத்தில் காட்டப்படும் மனித மதிப்பீடுகள் | முனைவர் கலையரசி, ம. | 32 |
| 12. | "லூக்கா நற்செய்தி" உவமைகள் வெளிப்படுத்தும் விழுமியங்கள் | செல்வி கற்பகவள்ளி, மு. | 36 |
| 13. | திருவிவிலியத்தில் மனித நேயம் | முனைவர் காந்திமேரி, எம்.எஸ். | 40 |
| 14. | கிறித்தவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | திரு. கிறிஸ்டியன் ஹீலர், தா. | 43 |
| 15. | இறைவேண்டலும் இனிய வாழ்வும் | திருமதி. சகாய ஹில்டா மேரி, டே | 46 |
| 16. | திருவிவிலியம் காட்டும் குடும்பம் குறித்த கட்டமைப்பு | முனைவர் சாந்தி, ப. | 49 |
| 17. | விவிலியத்தில் துகிலியலும் அது சார்ந்த மக்கள் வாழ்க்கை முறைகளும் | முனைவர் சாமுவேல் வெஸ்லி, தே. | 52 |
| 18. | திருவிவிலியத்தில் பெண்கள் (ரூத்து) | திருமதி. சிவகாமி, ம. | 58 |
| 19. | புதிய ஏற்பாட்டில் வாழ்வியல் நெறிகள் | முனைவர் சிவகாமி, ஆ. | 60 |
| 20. | விவிலியம் காட்டும் வாழ்வியல் | முனைவர் சுப்புலெட்சுமி, கோ. | 63 |
| 21. | முதிர்வயது - மனிதனின் கீழ்ப்படிதலும் கடவுளின் ஆசீர்வாதமும் | திருமதி சோபியா அடைக்கல மேரி,வ. | 65 |
| 22. | ஆதியாகமம் வழி கிறிஸ்தவமும் கீழ்ப்படிதலும் | முனைவர் டயானா கிறிஸ்டி, இரா. | 68 |
| 23. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | அருட்பணி முனைவர் டென்சன் எக்டர், இரா.செ. | 72 |
| 24. | திருவிவிலியத்தில் பெண்கள் நிலை | திரு.தட்சிணாமூர்த்தி, இரா. | 75 |
| 25. | நீதிமொழிகளும் திருக்குறளும் | செல்வி தேன்மொழி, அ. | 78 |
| 26. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | முனைவர் நிரஞ்சனா தேவி, இரா. | 83 |
| 27. | இயேசு காட்டும் மனித நேயம் | அருள்சகோ. பாத்திமா மேரி, ம. | 85 |
| 28. | திருவிவிலியம் தரும் அமைதிவாழ்வு | முனைவர் பாப்பி கமலாபாய், ஆ. | 88 |


Scanned with CamScanner

# முதிர்வயது - மனிதனின் கீழ்படிதலும் கடவுளின் ஆசீர்வாதமும்

திருமதி. வ. சோபியா அடைக்கல மேரி
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர் சமூகவியல் துறை,
பாத்தமா கல்லூரி, மதுரை – 625 018.

**முன்னுரை**

மனிதன் இந்தப் பூமியில் மலர்ந்தது முதல் உதிரும்வரை பல பருவங்களைக் கடந்தாக வேண்டும். குழந்தைப் பருவம், சிறுவர் பருவம், வளர் இளம்பருவம் (adult), மற்றும் முதிர்பருவம். இந்த முதிர்பருவமானது மனிதன் தன்னைத் தானே உலகத் தொடர்பில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்துக் கொள்ளுதல், தன்னையே தனிமைப்படுத்திக் கொள்ளுதல் எனும் நிலையாகும். உதாரணத்திற்குக் குடும்ப உறுப்பினர்கள் முதியவர்களைச் சற்றுத் தள்ளிவைத்தல். ஊர்த் திருவிழா, குடும்ப விழா, உற்றார் உறவினர்களின் திருமணத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்தல் போன்றவை நிகழ்கிறது. இது தற்காலத்தில் நடைமுறையில் உள்ள பழக்கம். ஆனால் விவிலியத்தில் உள்ள நிகழ்வைப் பார்த்தால் அங்கே கடவுளின் ஆசீர்வாதம் மனிதனை – முதியவர்களைச் சூழ்ந்து கொண்டதாகக் காணப்படுகிறது.

**முதிர்வயது – ஆசீர்வாதம்**

விவிலியத்தில் உள்ள முதியவர்களோ சற்று மாறுபடுகிறார்கள். எவ்வாறெனில் முற்காலத்தில் மனிதர்கள் 100 வயதிற்கு மேலே வாழ்ந்தால் அது கடவுளின் ஆசிர்வாதம் என்று கருதினர் நோவாவின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அவர் கடவுள் மேல் மிகுந்த நம்பிக்கையோடு பல வருடங்கள் வாழ்ந்துள்ளார். அவ்வாறு அவர் வாழ்ந்த போது நேர்மையோடும் உண்மையோடும் கடவுள் மீது பற்றோடும் வாழ்ந்ததின் பயனாக அவருக்கு ஆண்டவரின் அருள் பார்வைக் கிடைத்தது.

அதன் பலனாகத் தன்னையும் தன் சந்ததியினரையும் காத்துக் கொண்டார். ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் கூறியவாறே உனக்காகக் கோபர் மரத்தால் ஒரு பேழை செய். அதில் அறைகள் அமைத்து அதற்கு உள்ளேயும் வெளியேயும் கீழ்ப் பேழையை நீ செய்ய வேண்டிய முறையாவது நீளம் முந்நூறு முழம் அகலம் ஐம்பது முழம் உயரம் முப்பது முழம். பேழைக்குமேல் கூரை அமைத்து அந்தக் கூரை பேழைக்கு ஒருமுழம் வெளியே தாழ்வாக இருக்கும்படி கட்டிமுடி பேழையின் கதவை ஒரு பக்கத்தில் அமைத்தல் பேழையின் கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம் என மூன்று தளங்கள் அமைத்தல் வேண்டும். (தொடக்க நூல், 6:14–16)

கடவுளோ நோவாவிடம் “உன்னுடனே என் உடன் படிக்கையை நிலைநாட்டுவேன். உன் புதல்வர், உன் மனைவி, உன் புதல்வரின் மனைவியர் ஆகியோருடன் நீ பேழைக்குள் செல்”. (தொடக்க நூல், 6:18)

“உன்னுடன் உயிர் பிழைத்துக் கொள்ளுமாறு சதையுள்ள எல்லா உயிரினங்களிலிருந்தும் வகைக்கு இரண்டைப் பேழைக்குள் கொண்டு வா அவை ஆணும் பெண்ணுமாக இருக்கட்டும். வகை வகையான பறவைகள் கால்நடைகள் நிலத்தில் ஊர்வன ஆகியவற்றிலிருந்து வகைக்கு இரண்டு உயிர் பிழைத்துக் கொள்ள உன்னிடம் வரட்டும். உண்பதற்கான எல்லா வகை உணவுப் பொருள்களையும் நீ எடுத்துச் சென்று சேர்ந்து வைத்துக்கொள் அவை உனக்கும் அவற்றிற்கும் உணவாகட்டும்”

“கடவுள் தமக்குக் கட்டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார்”

(தொடக்க நூல், 6:19)

அப்பொழுது ஆண்டவர் நோவாவிற்குக் கூறியது நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல் ஏனெனில் இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன்.

(தொ. நூல், 7:1)

“மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது நோவாவிற்கு வயது அறுநூறு”

(தொ. நூ., 7:6)